[29th August 1970

Sculptors

*48. *Q.*—THIRU K. RAMAKRISHNA ACHARI (on behalf of THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the Government have any proposal to encourage expert sculptors ; and

(*b*) whether there is any proposal to grant pension to aged sculptors ?

சிற்பிகள்

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி : (தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் சார்பில்): மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சிறந்த சிற்பிகளை ஊக்குவிக்க அரசு திட்டம் வைத்திருக்கிறதா ?

(இ) முதுமை அடைந்த சிற்பிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ)வும், (இ)யும் : ஆம்.

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி : முதுமை அடைந்த சிற்பிகளுக்கு ஓய்வு ஊதியம் என்ற பெயரில் எத்தனை சிற்பிகளுக்கு கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இப்போது மூன்று ஓவியர்களுக்கு உதவி நிதி அளிக்கப்பட்டு வருகிறது. இதைக் கவனிப்பதற்கு லலித அகாடமி மூலமாகச் சிற்பிகள், ஓவியர்களுக்கு உதவி செய்கிற ஒரு சூழ்நிலை இருந்தது. லலித அகாடமி இப்போது கலைக்கப்பட்டுவிட்டது. மறுபடியும் தமிழ் நாடு நுண் கலைக் குழு என்ற பெயரில் அதை நடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 58 வயது நிரம்பிய ஓவியத் துறையில் ஈடுபட்டவர்கள் கஷ்ட நிலையில் இருந்தால், நாடகத் துறையிலும், மற்றத் துறைகளிலும் ஈடுபட்டவர்களுக்கு உதவுவதைப்போல, உதவித் தொகையாக ரூ. 150 அளிக்கப்படுகிறது. இப்போது மூன்று ஓவியர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி : எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : சிறந்த ஓவியராகவோ சிறந்த சிற்பியாகவோ இருந்து 58 வயது நிரம்பியிருக்க வேண்டும். அவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ. 1500-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.